குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 10–2019

அ.சா. 9

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. குணசேகரன் (Rtd. Sub Inspector) |
| தந்தை பெயர் | : | திரு. ரங்கசாமி கவுண்டர் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 65 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 11.08.2026**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிப்புரிந்து ஒய்வு பெற்று தருமபுரி மாவட்டத்தில் பாளையம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 16.05.2018ம் தேதி நான் பாகலூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது தருமபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த நாராயணப்பா என்பவரை தலைமை காவலர் வெங்கடேசன் என்பவர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து என்னிடம் ஒப்படைக்க அதை பெற்றுக்கொண்ட நான் நிலைய குற்ற எண் 117/2018 இதச பிரிவுகள் 294B, 324,

506(2)வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதே நாளான 16.05.2018ம் தேதி 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மோகன் மற்றும் நாகராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் பார்வைிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தேன். **அந்த மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் நாராயணப்பா, பாஸ்கர், நாகம்மா, சேகர், கிருஷ்ணன் மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். அதே நாள் 18.00 மணிக்கு ஜீவா நகரில் உள்ள எதிரியின் வீட்டின் முன்பு எதிரியே கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க வழிகாவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். சாட்சி நாராயணப்பாவுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கார்த்திக் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். மருத்துவர் அளித்த காயச்சான்றில் நாராயணப்பாவிற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று கருத்துரை வழங்கியதால் வழக்கின் சட்டபிரிவை 294(b), 326, 506(2) இதசவின் கீழ் மாற்றம் செய்தேன். **அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புலன் விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததில் இருந்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் வரை அனைத்து விசாரணையையும் நான்தான் மேற்கொண்டேன் என்றால் சரிதான். புகார் மனுவின் படி வழக்கு சம்பவம் 15.05.2018ம் தேதி இரவு 08.00 மணிக்கு நடைப்பெற்றது

என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் 16.05.2018ம் தேதி மதியம் 02.00 மணிக்கு தான் புகார் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காலை 10.30 மணிக்கு புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு மதியம் 02.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 நாராயணப்பா கொடுத்தாக சொல்லும் புகார் வாக்குமூலத்திலும், முதல் தகவல் அறிக்கையிலும் எதிரி அ.சா.1யை கத்தியால் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எதிரி கத்தியை எடுத்து அ.சா.1 யின் வலது கண்ணத்தில் வெட்டி கிழித்துவிட்டு பின்னர் தனது இடது கண் புருவத்தில் குத்தினார் என்றும் அதில் தனதுஇடது கண்ணும் அடிப்பட்டது ரத்தகாயம் ஏற்பட்டதாகவும் சொல்லி உள்ளார். இந்த வழக்கில் எதிரி பயன்படுத்தியாக சொல்லப்படும் கத்தியை வழக்கு சொத்தாக கைப்பற்றவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கு முன்பு எதிரியும், அ.சா.1ம் ஒரே இடத்தில் மது அருந்தியதை பற்றி நான் விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் எதிரி மட்டும் மது அருந்திவிட்டு அ.சா.1யின் வீட்டிற்கு சென்று அவரை தாக்கியதாக விசாரணையில் தெரியவந்தது. சம்பவத்தின் போது அ.சா.1யின் மனைவி நாகம்மா செஸ்லேண்ட் கம்பெனியின் வேலை செய்து வந்ததாக விசாரணையில் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். சம்பவம் நடைப்பெற்றது இரவு 08.00 மணி என்றாலும் அந்த நேரத்தில் எதிரி மற்றும் அ.சா.1 யை தவிர சம்பவ இடத்தில் யாரும் இல்லை என்றாலும் சரிதான். இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக யாரையும் நான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் அ.சா.1 அளவுக்கு அதிகமாக மது அருந்திவிட்டு போதையில் அவரே நிலை தடுமாறி கீழே விழுந்து அவருக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் எதிரி மீது பொய்யாக புகார்

அளிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கை முறையான விசாரணை மேற்கொண்டு இருந்தால் மேல் நடவடிக்கை கைவிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. புள்ளி விவரத்திற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஒம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**